செ.வெ.எண்: 25 நாள்:08.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் பயனாளிகளுக்கு சுமார் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் வருவாய் துறையின் சார்பில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் 07.08.2016 அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் குளத்தூர் வட்டத்தை சேர்ந்த பயனாளிகளுக்கு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இதில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 22 பயனாளிகளுக்கு ரூ.220000 மதிப்பில் பெண் திருமண உதவித்தொகைக்கான காசோலைகளும், 26 பயனாளிகளுக்கு ரூ.208000 மதிப்பில் ஆண் திருமண உதவித்தொகைக்கான காசோலைகளும், 114 பயனாளிகளுக்கு ரூ.1417500 மதிப்பில் இறப்பு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 1 பயனாளிக்கு ரூ.1000 மதிப்பில் முதிர்கன்னி உதவித்தொகைக்கான காசோலைகளும், 1 பயனாளிக்கு ரூ.1000 மதிப்பில் கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகைக்கான காசோலையும், 5 பயனாளிகளுக்கு ரூ.5000 மதிப்பில் இந்திராகாந்தி தேசிய விதவை உதவித்தொகைக்கான காசோலைகளும் வழங்கப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டாச்சியர் அலுவலக வளாகத்தில் வருவாய்த்துறையின் சார்பில் குளத்தூர் வட்டத்தை சேர்ந்த பயனாளிகளுக்கு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று(7.8.2016) வழங்கினார்.உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

மேலும் 6 பயனாளிகளுக்கு ரூ.6000 மதிப்பில் விதவை உதவித்தொகைக்கான காசோலைகளும், 12 பயனாளிகளுக்கு ரூ.12000 மதிப்பில் இந்திராகாந்தி தேசிய மாற்றுத்திறனாளி உதவித்தொகைக்கான காசோலைகளும், 11 பயனாளிகளுக்கு ரூ.11000 மதிப்பில் உடல் ஊனமுற்றோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 19 பயனாளிகளுக்கு ரூ.19000 மதிப்பில் உழவர் பாதுகாப்புத்திட்ட உதவித்தொகைக்கான காசோலைகளும், 108 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாக்களுக்கான ஆணைகளும், 201 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும் என மொத்தம் 526 பயனாளிகளுக்கு ரூ.1900500 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள ஏடிஆர் நகர் பொதுமக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று தற்பொழுது வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. கீரனூர் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு தேவையான இடத்தை வழங்கும் வகையில் அலுவலர்கள் மூலம் களஆய்வு மேற்கொண்டு பொதுப்பணித்துறையிடமிருந்து பள்ளிக்கல்வித்துறைக்கு இடத்தை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இப்பகுதி பொதுமக்களின் குடிநீர் தேவையை முழுவதுமாக பூர்த்தி செய்யும் வகையில் ரூ.310 கோடி மதிப்பீட்டில் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகள் அறிவிக்கப்பட்டு தற்பொழுது முடிக்கப்பட்டு நீர் சோதனை ஓட்டம் நடைபெற்று வருவதுடன், விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. பொதுமக்கள் வழங்கிய பல்வேறு கோரிக்கை மனுக்களை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பொதுமக்கள் இதனை உரிய முறையில் பெற்று பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் விராலிமலை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட இடத்தினை தேர்வு செய்யும் வகையில் விராலிமலை பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி வளாகத்தில் உள்ள இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், தனித்துணைஆட்சியர்(சிறப்பு திட்டஅமலாக்கம்) திருமதி.கலைச்செல்வி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் திரு.துரைராஜ், திருமதி.அமுதாபாலு, ஆத்மா குழுத்தலைவர்கள் திரு.பால்ராஜ், திரு.பழனியாண்டி, வட்டாட்சியர்கள் திருமதி.கிருஷ்ணவேணி, திரு.சதீஷ், ஊராட்சி மன்றத்தலைவர் திரு.ராமசாமி, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.கார்த்திக்பிரபாகரன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**